# அறிவித்தல்

## 2016 ஆம் ஆண்டின் 12ம் இலக்க தகவல் அறியும் உரிமை சட்டம்

மேற்குறிப்பிட்ட சட்டத்தின் கீழ் இந்நிறுவனத்துடன தொடர்புடைய தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக தகவல் அலுவலரிடம் RTI 02ம் இலக்க விண்ணப்பப் படிவத்தின் ஊடாக விண்ணப்பிக்கலாம். இவ்விண்ணப்பப் படிவத்தைச் சமர்ப்பிக்க வேண்டிய கட்டாயமில்லை.


தகவல் அலுவலர்,

திரு/திருமதி (பெயர்) ஜீ. ஆர். எம். கே. குணரத்ன (பதவி) உதவி பிரதேச செயலாளர்

(முகவரி) பிரதேச செயலகம், ரதுபஸ்வத்த, கேகாலை

தொடர்புகொள்ளக் கூடிய தொலைபேசி இலக்கம்: 035 2230452

மின்னஞ்சல்: dskegalle@gmail.com


01. தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக எழுத்துமூல RTI 01 விண்ணப்பப் படிவமொன்றையோ கடிதமொன்றையோ அல்லது வாய்மொழி மூல விண்ணப்ப மொன்றையோ தகவல் அலுவலரிடம் சமர்ப்பித்து அது கிடைத்தமைக்கான கடிதமொன்றைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

02. உங்களுடைய கோரிக்கைக்குரிய தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியுமா என்பது பற்றி இயன்றளவு விரைவில், எவ்வாறாயினும் 14 நாட்களுக்குள் அறிவிக்கப்படும்.

03. கோரப்பட்டிருக்கும் தகவல்களை உங்களுக்கு வழங்கத் தீர்மானித்தால், ஆணைக்குழு விதித்த கட்டணத்தைச் செலுத்த வேண்டுமெனில், அது உங்களுக்கு அறிவிக்கப்படும். தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்குக் கட்டணமொன்றைச் செலுத்த வேண்டுமாயின் அதற்கேற்ப கட்டணத்தை அறிவிடுவதன் அடிப்படையில் அல்லது கட்டணம் செலுத்த அவசியமில்லை எனின், கட்டணமின்றி உங்களுக்கு 14 நாட்களுக்குள் தகவல்கள் பெற்றுத் தரப்படும்.

04. கட்டணங்களைச் செலுத்திய பின்னர், 14 நாட்களுக்குள் தகவல்களைப் பெற்றுத்தருவது கடினமாக இருப்பின், தகவல் அலுவலரால் அக்கால எல்லையை நீடிப்பதற்குத் தேவையான காரணங்களைக் குறிப்பிட்டு 21 நாட்களுக்கு மேற்படாத மேலதிக கால அவகாசத்திற்குள் நீங்கள் கோரியிருந்த தகவல்களை உங்களுக்குப் பெற்றுத் தருவார்.

05. தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான கோரிக்கை ஏதேனுமொரு பிரஜையின் உயிர் மற்றும் அந்தரங்க சுதந்திரம் தொடர்பானதாக அமையும் போது கோரிக்கைக்கான பதில் வழங்குதலானது கோரிக்கை கிடைத்து 42 மணித்தியாலத்திற்குள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

06. தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக மேற்கொள்ளப்படும் கோரிக்கையொன்றுடன் ஏற்புடையவாறு,

i. தகவல் பெறுவதற்காக மேற்கொள்ளப்பட்ட ஏதேனுமொரு விண்ணப்பத்தை மறுத்தல்

ii. சட்டத்தின் 5 வது பிரிவின் கீழ் வெளியிடப்படுவதிலிருந்து விலக்களிக்கப்பட்டிருக்கும் தகவல்கள் காரணமாக ஏதேனுமொரு தகவலை கோருவதற்கு சந்தர்ப்பமளிப்பதை மறுத்தல்

iii. சட்டத்தினால் உறுதியாகக் குறிப்பிடப்பட்டுள்ள கால எல்லைகளுக்கு ஏற்றவாறு அமையாமை

iv. பூர்த்தியற்ற, தவறாக வழிகாட்டும், அல்லது போலியான தகவல்களை வழங்குதல்

v. மிகையான கட்டணங்கள்

vi கோரப்பட்டுள்ள வடிவத்தில் தகவல்களை வழங்க, தகவல் அலுவலர் மறுத்தல்

vii. இத்தகவல்களை அப்பிரஜை கோருவதைத் தவிர்ப்பதற்காக அத் தகவல்களைச் சீருக்குலைத்து அழிக்கப்பட்டு அல்லது காணாமல் ஆக்கப்பட்டுள்ளது என்பதற்கு தகவல் கோரும் பிரஜைக்கு நியாயமான ஏதுக்கள் உள்ளமை.

இந்த மாதிரிக்கு உட்பட்டதாயின் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குறித்தளிக்கப்பட்ட அலுவலருக்கு 14 நாட்களுக்குள் மேன் முறைப்பாடொன்றைச் சமர்ப்பிக்குக.


குறித்தளிக்கப்பட்ட அலுவலர்,

திரு/திருமதி (பெயர்) எம். எம். பி. பி. பெதன்கொட

(பதவி) பிரதேச செயலாளர் (பதில் கடமை)

(முகவரி) பிரதேச செயலகம், ரதுபஸ்வத்த, கேகாலை

தொடர்புகொள்ளக் கூடிய தொலைபேசி இலக்கம்: 035 2230452

மின்னஞ்சல்: dskegalle@gmail.com